முழுப் பதிப்புரிமையுடையது.

# இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர் கழகம்

## மட்டம் II பரீட்சை – 2024 சனவரி

## (203) வணிகச் சட்டம்

(Business Law)

2024-02-10
பிற்பகல்
[01.45 – 05.00]

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்** (கவனமாக வாசிக்கவும்):

(1) ***அனுமதிக்கப்பட்ட காலம் :*** *வாசிப்புக்கு : 15 நிமிடங்கள்*
*விடையெழுத : 03 மணித்தியாலங்கள்*

பக்கங்கள் : 07
வினாக்கள் : 07

(2) ***சகல வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.***

(3) *வழங்கப்பட்டுள்ள **விடைப் புத்தகத்தில்** நீங்கள் விண்ணப்பித்த **மொழி மூலத்திலேயே விடைகள்** எழுதப்படல் வேண்டும்.*

(4) *ஏதாவது எடுகோள்களை நீங்கள் மேற்கொண்டிருப்பின் அவற்றைத் தெளிவாகக் குறிப்பிடவும்.*

(5) ***செயல் வினைச் சொற்களின் செவ்வை நிரல்** அவற்றின் **வரைவிலக்கணங்களுடன்** இணைக்கப்பட்டுள்ளது. நோக்கச் சோதனை வினாக்கள் தவிர்ந்த ஏனைய ஒவ்வொரு வினாவும் ஒரு **செயல் வினைச் சொல்லை** கொண்டுள்ளது. பரீட்சார்த்திகள் செயல் வினைச் சொல் செவ்வை நிரலில் தரப்பட்டுள்ள வரைவிலக்கணங்களின் அடிப்படையில் வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.*

(6) *100 புள்ளிகள்*

---

# பகுதி A

### நோக்கச் சோதனை வினாக்கள் (OTQs)

(மொத்தம் 25 புள்ளிகள்)

## வினா 01

*இல. **1.1** தொடக்கம் **1.6** வரையான வினாக்களுக்கு மிகச் சரியான விடையைத் தெரிவு செய்க. தெரிவு செய்யப்பட்ட விடையின் இலக்கத்தை அதற்குரிய வினா இலக்கத்துடன் உமது விடைப் புத்தகத்தில் எழுதுக.*

**1.1** கீழ்வருவனவற்றுள் பொதுச் சட்டமாகக் கருதப்படுவது எது?

(1) முஸ்லிம் சட்டம்.
(2) கண்டியச் சட்டம்.
(3) தேசவழமைச் சட்டம்.
(4) ஆங்கிலச் சட்டம்.

**1.2** கீழ்வருவனவற்றுள் தேடுதல் செய்வதற்கான ஆணைகளையும் (search warrants) சந்தேக நபர்களைக் கைது செய்வதற்கான ஆணைகளையும் வழங்குவது தொடர்பான நியாயாதிக்கத்தை நிருவகிக்கின்ற நீதிமன்றம் எது?

(1) உயர் (Supreme) நீதிமன்றம்.
(2) குடும்ப நீதிமன்றம்.
(3) நீதிவான் நீதிமன்றம்.
(4) மேன்முறையீட்டு நீதிமன்றம்.

**1.3** ஒப்பந்தச் சட்டத்துடன் தொடர்புடைய கீழ்வரும் கூற்றுக்கள் உங்களுக்குத் தரப்பட்டுள்ளன :

**(a)** எழுத்துபூர்வமான ஒப்பந்தங்கள் மாத்திரமே சட்டத்தினால் செயல்படுத்தப்படுகின்றன.

**(b)** தரப்பினர்களின் உட்கிடையான நடத்தை (implied conduct) மூலம் ஒப்பந்தமொன்று செய்யப்படலாம்.

**(c)** சில ஒப்பந்தங்கள் குறிப்பிட்ட நியதிச்சட்டங்களால் விதிக்கப்பட்ட சம்பிரதாயங்கள் மற்றும் தேவைகளுக்கு இணங்க எழுத்துபூர்வமாகச் செய்யப்பட வேண்டும்.

மேலுள்ளவற்றுள், ஒப்பந்தச் சட்டம் தொடர்பான சரியான கூற்று / கூற்றுக்களாவன :

(1) **(a)** மாத்திரம்.
(2) **(c)** மாத்திரம்.
(3) **(a)** யும் **(b)** யும் மாத்திரம்.
(4) **(b)** யும் **(c)** யும் மாத்திரம்.

**1.4** கீழ்வருவனவற்றுள் கம்பனியொன்றின் அமைப்பக விதிகள் (Articles of Association) தொடர்பான ***தவறான*** கூற்று எது?

(1) கம்பனிப் பங்குதாரர்களின் உரிமைகளும் கடப்பாடுகளும் அமைப்பக விதிகளில் உள்ளடக்கப் படுகின்றன.

(2) அமைப்பக விதிகளை கம்பனியால் திருத்தம் செய்ய முடியாது.

(3) கம்பனியும் அதன் பங்குதாரர்களும் அமைப்பக விதிகளுக்கு கட்டுப்பட்டவர்கள்.

(4) கம்பனியின் நோக்கங்கள் அமைப்பக விதிகளில் இருக்கின்றன.

**1.5** CIF உடன்படிக்கை தொடர்பான கீழ்வரும் பொறுப்புகளைக் கருதுக :

**(a)** உடன்படிக்கையில் விபரிக்கப்பட்ட நியமத்தின்படி பொருள்களை கப்பலில் ஏற்றுதல்.

**(b)** காப்புறுதி ஒப்பந்தமொன்றைத் தயாரித்தல்.

**(c)** பொருள்களுக்கான விலைப்பட்டியலைத் (invoice) தயாரித்தல்.

**(d)** தொடர்புடைய ஆவணங்கள் பெறப்பட்டதன் பின்னர் விலைப்பட்டியலுக்கான கொடுப்பனவு களைத் தீர்த்தல்.

மேலுள்ளவற்றுள், விற்பனையாளரின் பொறுப்புக்களாவன :

(1) **(a)** யும் **(b)** யும் மாத்திரம்.
(2) **(a)** யும் **(b)** யும் **(c)** யும் மாத்திரம்.
(3) **(a)** யும் **(c)** யும் **(d)** யும் மாத்திரம்.
(4) மேற்கூறிய யாவும்.

**1.6** 1927 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க மாற்றுண்டியல் கட்டளைச் சட்டத்தினால் இனங்காணப் பட்டவாறு மாற்றத்தகு சாதனமாக **அமையாதது** கீழ்வருவனவற்றுள் எது?

(1) காசோலைகள்.
(2) காசுக் கட்டளைகள்.
(3) உத்தரவாதச் சீட்டுகள்.
(4) மாற்றுண்டியல்.

(02 புள்ளிகள் வீதம், 12 புள்ளிகள்)

*இல. **1.7** தொடக்கம் **1.9** வரையான பின்வரும் ஒவ்வொரு கூற்றும் **சரியானதா** அல்லது **தவறானதா** என்பதைக் குறிப்பிடுக. தெரிவு செய்யப்பட்ட விடையை (சரியானது / தவறானது) உமது விடைப்புத்தகத்தில் வினா இலக்கத்தைக் குறிப்பிட்டு அதன் எதிரே எழுதுக.*

**1.7** வணிகமொன்றில் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நபர்கள் இலாபத்தைப் பகிர்ந்துகொள்ளும் நோக்குடன் ஒன்றுசேரும்போது "பங்குடமை" உருவாகலாம்.

**1.8** சர்வதேச வர்த்தக உடன்படிக்கை தொடர்பான சீரான நடைமுறைகள் (INCOTERMS) என்பது சர்வதேச வர்த்தக ஒப்பந்தங்களில் கொள்வனவாளரினதும் விற்பனையாளரினதும் பொறுப்புக்களை வரையறை செய்கின்ற நியமப்படுத்தப்பட்ட விதிகளின் ஒரு தொகுப்பு ஆகும்.

**1.9** மாற்றுண்டியல் ஒன்றை குறுக்குக் கோடிட முடியும். (01 புள்ளி வீதம், 03 புள்ளிகள்)

*இல. **1.10** தொடக்கம் **1.14** வரையான வினாக்களுக்கான குறுகிய விடைகளை, உங்களுடைய விடைப் புத்தகத்தில் உரிய வினா இலக்கத்தைக் குறிப்பிட்டு அதன் எதிரே எழுதவும்*

**1.10** ஒப்பந்தச் சட்டத்திலுள்ள நிபந்தனையொன்று மீறப்படும்போது அப்பாவியான தரப்புக்கு (innocent party) கிடைக்கக்கூடிய இரண்டு (02) பரிகாரங்களைக் (remedies) குறிப்பிடுக.

**1.11** "குடியியல் சட்டம் (Civil Law)" மற்றும் "குற்றவியல் சட்டம் (Criminal Law)" ஆகியவற்றுக் கிடையிலான இரண்டு (02) வேறுபாடுகளைக் குறிப்பிடுக.

**1.12** 2006 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க பணச் சலவைத் தடுப்புச் சட்டத்தின் நோக்கத்தைக் குறிப்பிடுக.

**1.13** நீதிமன்றம் பங்குடமை ஒன்றைக் கலைக்கக்கூடிய இரண்டு (02) சந்தர்ப்பங்களைக் குறிப்பிடுக.

**1.14** சர்வதேச வர்த்தகப் பிணக்குகளை தீர்ப்பதற்குப் பயன்படுத்தப்படுகின்ற நீதித்துறை சாரா (non-judicial) பிணக்குத் தீர்க்கும் முறைகள் இரண்டினைக் (02) குறிப்பிடுக.

(02 புள்ளிகள் வீதம், 10 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

*பகுதி A முடிவு*

## பகுதி B

(மொத்தம் 50 புள்ளிகள்)

## வினா 02

**கினிகே** என்பவர் 2023 சனவரியில் **வரையறுக்கப்பட்ட ABC காப்புறுதிக் கம்பனியில்** தனது வீட்டை காப்புறுதி செய்துள்ளார். அவர் 2023 யூலை மாதம் அவுஸ்திரேலியாவுக்கு குடிபெயர இருப்பதால் 2023 மார்ச் இல், தனது வீட்டை விற்பனை செய்வதற்குத் தீர்மானித்திருந்தார். **செல்வதுரை** என்பவர் அவரது வீட்டை வாங்குவதற்கு உடன்பட்டார். 2023 ஏப்ரல் 05 இல், **செல்வதுரை** வீட்டிற்கான முழு விலையையும் செலுத்திய பின்னர் வீட்டை வாங்கியிருந்ததுடன் 2023 ஏப்ரல் மாத இறுதியில் புதிய வீட்டிற்கு குடிபுக திட்டமிட்டிருந்தார். ஆனால் 2023 ஏப்ரல் 10 ஆந் திகதி ஏற்பட்ட தீ விபத்தினால் வீடு சேதமடைந்தது. **வரையறுக்கப்பட்ட ABC காப்புறுதிக் கம்பனி** சேதத்திற்கான இழப்பீட்டை **கினிகே** இற்கு வழங்கியது. பின்னர், வீடு வேறொருவருக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது என்பதை **வரையறுக்கப்பட்ட ABC காப்புறுதிக் கம்பனி** அறிந்து கொண்டது. இதனால், காப்புறுதி இழப்பீடாகத் தாங்கள் வழங்கிய கொடுப்பனவை மீளப் பெற அவர்கள் தீர்மானித்தனர்.

**நீங்கள் செய்ய வேண்டியவை:**

(a) **வரையறுக்கப்பட்ட ABC காப்புறுதிக் கம்பனி,** காப்புறுதி இழப்பீடாக தாங்கள் வழங்கிய கொடுப்பனவை மீளப்பெற முடியுமா என்பதை **விபரிக்குக.** (06 புள்ளிகள்)

(b) காப்புறுதியில் "பங்களிப்புக் கோட்பாடு" என்பதை **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 03

**பக்தி** என்பவர் பாரம்பரிய பற்றிக் ஆடைகளை விற்பனை செய்கின்ற ஒரு கடையைச் சொந்தமாகக் கொண்டுள்ளார். அவர் துபாய் நாட்டில் நடைபெறுகின்ற சர்வதேச பற்றிக் மாநாட்டிற்குச் செல்ல வேண்டியிருந்ததால் தனது கடையை நடத்திச் செல்வதற்கு தனது உற்ற தோழியான **அவங்கா** என்பவரை நியமித்தார். அதன்போது, கடையிலுள்ள எந்தவொரு ஆடையையும் அந்தந்த ஆடைகளில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள விலையின் 75% இற்கும் குறைவாக விற்பனை செய்ய வேண்டாம் என **பக்தி, அவங்காவுக்கு** அறிவுறுத்தியிருந்தார். அத்துடன் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் கடைக்காக எவ்வித இருப்புகளையும் கொள்வனவு செய்ய வேண்டாம் எனவும் எச்சரித்திருந்தார்.

**பக்தி** இலங்கையிலிருந்து புறப்பட்டதும், **அவங்கா** ஆடையில் காட்சிப்படுத்தப்பட்டிருந்த விலையின் 70% இல் **வரையறுக்கப்பட்ட சலு-சலா கம்பனிக்கு** 50 புடைவைகள் கொண்ட பொதியொன்றை விற்பனை செய்திருந்தார். அத்துடன் எதிர்பார்க்கப்பட்டதை விட விரைவாக சாறன்களின் இருப்பு முடிவடைந்ததால் உள்நாட்டு வழங்குநர் ஒருவரிடமிருந்து 100 பற்றிக் சாறன்களை **அவங்கா** கொள்வனவு செய்திருந்தார். இந்தப் பரிவர்த்தனைகளால் தனக்கு நட்டமேற்பட்டுள்ளது என **பக்தி** நினைக்கிறார்.

**நீங்கள் செய்ய வேண்டியவை:**

(a) முதல்வர் - முகவர் உறவு உருவாகக்கூடிய இரண்டு (02) வழிமுறைகளைக் (ways) **குறிப்பிடுக.**
(02 புள்ளிகள்)

(b) **பக்தி** இன் முகவராக **அவங்கா**வின் கடமைகளை **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(c) **பக்தி, அவங்கா**விடமிருந்து சேதத்திற்கான கிரயங்களை அறவிட முடியுமா என்பதை **விபரிக்குக.**
(04 புள்ளிகள்)
(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 04

நாட்டின் பிரஜைகளுக்கு அரிசியானது மலிவான விலையில் கிடைப்பதை உறுதி செய்வதற்காக இலங்கை அரசாங்கம் 2023 மார்ச் இல் அரிசி உள்ளிட்ட அத்தியாவசியப் பண்டங்களுக்கு விலைக் கட்டுப்பாடு ஒன்றை விதித்திருந்தது. **மயூரா** என்பவர் அத்தியாவசிய மளிகைப் பொருள்களை விற்பனை செய்கின்ற **சந்துன் ஸ்டோர்ஸ்** இன் ஒரு நிரந்தர வாடிக்கையாளர் ஆவார். எவ்வாறாயினும், **மயூரா** அரிசி வாங்குவதற்காக **சந்துன் ஸ்டோர்ஸ்** இனுள் நுழைந்தபோது அரிசியை போட்டு வைத்திருக்கும் அனைத்து வாளிகளும் பெரும்பாலும் வெறுமையாகவே இருந்ததை அவர் அவதானித்தார். அதைப்பற்றி **மயூரா** பணிவாக வினவியபோது, சில வழங்கல் சங்கிலிப் பிரச்சினைகள் இருப்பதாகவும் அரிசி விநியோகம் தாமதமடைந்திருப்பதாகவும் **சந்துன்** பதிலளித்திருந்தார். **மயூரா** கடையை விட்டு வெளியேறும்போது, **சந்துன் ஸ்டோர்ஸ்** இல் அரசித் தட்டுப்பாடு இருப்பது பற்றியும் மற்றைய கடைகளில் அவ்வாறு ஒரு பிரச்சினை இருப்பதாகத் தெரியவில்லை எனவும் சில நபர்கள் முணுமுணுப்பதை அவதானித்தார். **மயூரா** மீண்டும் **சந்துன் ஸ்டோர்ஸ்** இற்குச் சென்று மற்றைய கடைகளில் அரிசி இருப்பதைக் கூறி **சந்துன்** உடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டார். **சந்துன்** மயூராவை உடனடியாக கடையை விட்டு வெளியேறுமாறு பணித்தார்.

**நீங்கள் செய்ய வேண்டியவை:**

(a) நுகர்வோர் அலுவல்கள் அதிகாரசபையின் இரண்டு (02) நோக்கங்களை **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(b) மேற்படி சூழலில் **மயூராவுக்கு** உள்ள சட்ட உரிமைகளை **விபரிக்குக.** (06 புள்ளிகள்)
(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 05

(a) "தனியான சட்ட ஆளுமை என்பது ஒரு கூட்டுத்தாபனம் அல்லது ஒரு கம்பனியின் தனித்துவமான சட்ட அடையாளத்தைக் குறிக்கிறது. இது சட்டத்தின் பார்வையில் அதன் உரிமையாளர்கள் அல்லது பங்குதாரர்களிடமிருந்து வேறுபட்டதாகும்".

**நீங்கள் செய்ய வேண்டியது:**

நிறுவனத்தின் முகத்திரை (corporate veil) அகற்றப்படுகின்ற நான்கு (04) சந்தர்ப்பங்களைக் **குறிப்பிடுக.** (04 புள்ளிகள்)

(b) **நதுன்** என்பவர் வெற்றுக் காசோலை (blank cheque) ஒன்றில் கையொப்பமிட்டு, அதில் "மாற்றத்தகாதது" என்ற வாசகத்துடன் குறுக்குக் கோடிட்டுள்ளார். அவர் அந்தக் காசோலையை தனது உதவியாளரான **சுமுது** என்பவரிடம் கொடுத்து, தனது வணிகத்தின் நீர்க் கட்டணத்திற்கான தொகையை அதில் நிரப்பி, கொடுப்பனவைச் செய்யுமாறு கேட்டுக்கொண்டார். எனினும், **சுமுது மனீஸா** என்பவரிடமிருந்து பெற்ற கடனொன்றை தீர்ப்பனவு செய்வதற்காக அந்தக் காசோலையில் விபரங்களைப் பூர்த்திசெய்து **மனீஸாவிடம்** கொடுத்திருந்தார். **மனீஸா** அந்தக் காசோலையை வங்கியில் சமர்ப்பித்தார்.

**நீங்கள் செய்ய வேண்டியது:**

மேற்படி காசோலை தொடர்பில் வங்கியின் பொறுப்பினை **விபரிக்குக.** (06 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 06

**மதுஷா** என்பவர் ஒரு வரைகலை (கிராபிக்ஸ்) வடிவமைப்பாளராவார். **Content.lk** என்ற நிறுவனம் தாங்கள் பொறுப்பெடுத்த செயற்றிட்டம் ஒன்றை நிறைவு செய்வதற்காக அவரை வாடகைக்கு அமர்த்தியது. **மதுஷா** நிறுவன உரிமையாளரின் உறவினராக இருப்பதால், அவர் எந்தவொரு ஒப்பந்தத்திலும் கையெழுத்திடவில்லை. அவரிடம் செயற்றிட்டத்திற்கான சமூக ஊடக சந்தைப்படுத்தலைக் கையாளுமாறு கூறப்பட்டது. எவ்வாறாயினும், செயற்றிட்டத்தின் காலப்பகுதி பற்றி அவருக்குத் தெரிவிக்கப்படவில்லை. **மதுஷா** தினசரி அலுவலகத்திற்குச் செல்வதில்லை. அவர் வீட்டிலிருந்து தனது சொந்த மடிக்கணினியைப் பயன்படுத்தி வேலை செய்ததுடன் அவர் தனது சொந்தப் பணத்திலிருந்து வரைகலை வடிவமைப்பு மென்பொருளைக் கொள்வனவு செய்திருந்தார். அவர் தேவையானபோதெல்லாம் காலக்கெடுவினுள் தனது வேலையை நிறைவு செய்தார்.

பல மாதங்களுக்குப் பின்னர், **Content.lk,** தனது வணிகத்திற்கான ஒரு புதிய அடையாளக் குறியீட்டை (logo) உருவாக்க விரும்பியது. இது பற்றி கம்பனி **மதுஷாவுக்கு** தெரிவித்தபோது, அவ்வாறான அடையாளக் குறியீட்டை உருவாக்குவதற்கு ஒரு புதிய மென்பொருளை கொள்வனவு செய்ய வேண்டுமென **மதுஷா** தெரிவித்திருந்தார். எனவே, அவர் தனது தொழில்முறைக் கட்டணத்தையும் மென்பொருளின் விலையையும் குறிப்பிட்டு, விலைப்பட்டியலொன்றை உரிமையாளருக்கு அனுப்பியிருந்தார். **மதுஷா**வின் தொழில்முறைக் கட்டணமானது சந்தையில் நிலவும் கட்டணங்களைவிட அதிகமானது என்பதை உரிமையாளர் அறிந்துகொண்டார். எனவே அவருடைய கட்டணத்தைக் குறைக்குமாறு உரிமையாளர் **மதுஷா**விடம் கேட்டுக் கொண்டார்.

**நீங்கள் செய்ய வேண்டியவை:**

(a) **மதுஷா Content.lk** நிறுவனத்தின் ஓர் ஊழியரா என்பதை **விபரிக்குக.** (06 புள்ளிகள்)

(b) ஊழியர் ஒருவர் ஊழியர் சேமலாப நிதியத்தின் (EPF) நன்மைகளைக் கோரக்கூடிய நான்கு (04) சந்தர்ப்பங்களைக் **குறிப்பிடுக.** (04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

*பகுதி B முடிவு*

## பகுதி C

(மொத்தம் 25 புள்ளிகள்)

## வினா 07

(A) பிரபல கார் ஓட்டுநரான **திரு. டீல்** என்பவர் தான் பயன்படுத்திய சொகுசுப் பந்தயக் காரை “1976 மொடல் சீ, கருப்பு நிறம் - விற்பனைக்கு” என விளம்பரப்படுத்தியிருந்தார். பந்தயக் கார் ஓட்டுநரும் கார்களின் தீவிர ரசிகருமான **திரு. கீல்ஸ்** என்பவர் எந்தவித விலைக் கழிவுகளோ அல்லது விலைக் குறைப்போ கோராமல் **திரு. டீல்** இனால் குறிப்பிடப்பட்ட விலைக்கு அதனைக் கொள்வனவு செய்திருந்தார்.

2022 அக்டோபரில் பிரான்சில் நடைபெற்ற ‘‘உலக கார்ப் பந்தயப் போட்டியில்’’ **திரு. கீல்ஸ்** அவர்கள் கலந்து கொண்டார். அவர் **திரு. டீல்** இடமிருந்து வாங்கிய காரை ஓட்டியிருந்தார். போட்டி நடைபெற்றுக் கொண்டிருந்தபோது கார் இடைவழியில் நின்று விட்டது. அதன் பின்னர், **திரு. டீல்** இடமிருந்து வாங்கிய கார் 1967 மொடல் வாகனம் என்பதை **திரு. கீல்ஸ்** கண்டறிந்தார். தற்போது **திரு. டீல்** இடமிருந்து பணத்தை மீளப் பெறுவதற்கு **திரு. கீல்ஸ்** எதிர்பார்க்கிறார்.

**நீங்கள் செய்ய வேண்டியவை:**

(a) பொருள்கள் விற்பனைக் கட்டளைச் சட்டத்தின் கீழான மூன்று (03) உட்கிடை நிபந்தனை களைக் **குறிப்பிடுக.** (03 புள்ளிகள்)

(b) ‘‘விற்பனை ஒப்பந்தம்’’ மற்றும் விற்பனைக்கான உடன்படிக்கை’’ ஆகியவற்றுக்கிடையிலான வேறுபாட்டை **விபரிக்குக.** (05 புள்ளிகள்)

(c) **திரு. டீல்** இடமிருந்து **திரு. கீல்ஸ்** இனால் தனது பணத்தை மீளப் பெற முடியுமா என்பதை **விபரிக்குக.** (07 புள்ளிகள்)

(B) 17 வயதான **நயனி** ஒரு மிகச்சிறந்த **பியானோ** கலைஞர் ஆவார். ஒரு உள்நாட்டு இசைக் கல்லூரியான **சாந்தி அக்கடமி**யானது அவரது திறமையை அங்கீகரித்து அவருக்கு மேம்பட்ட பியானோ கல்வியைப் பெற்றுக் கொடுக்கும் நோக்கில் வரவிருக்கும் ஆண்டிற்காக புலமைப்பரிசில் ஒன்றை அவருக்கு வழங்கியது. இதற்குப் பதிலாக **நயனி** பல பாடசாலை நிகழ்வுகளில் நிகழ்ச்சிகளை நடத்திக் கொடுக்க வேண்டும். எவ்வாறாயினும், கல்வி கற்கத் தொடங்கி சில மாதங்களின் பின்னர், **நயனி** அக்கடமியுடனான தனது ஈடுபாட்டைத் துண்டிப்பதற்குத் தீர்மானித்தார். அவர் கற்கைகள் மற்றும் நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வதை நிறுத்தியிருந்தார். உடன்படிக்கையானது **நயனிக்கு** சாதகமாக அமைந்தது என்றும் ஏற்கனவே வழங்கிய கல்விக்கான கொடுப்பனவை செலுத்த வேண்டும் என்றும் அக்கடமி கூறியது. **நயனியின்** பெற்றோர், நயனி ஒப்பந்தத்திற்கு கட்டுப்பட வேண்டியதில்லை என வாதிடுகின்றனர்.

**நீங்கள் செய்ய வேண்டியவை:**

(a) நயனி மேற்படி ஒப்பந்தத்திற்கு கட்டுப்பட்டவரா என்பதை **விபரிக்குக.** (06 புள்ளிகள்)

(b) விதிவிலக்கு விதிகள் செல்லுபடியற்றதாக இருக்குமென நம்பப்படுகின்ற இரண்டு (02) சந்தர்ப்பங்களை **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

*பகுதி C முடிவு*

# செயல் வினைச்சொல் செவ்வை நிரல்

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **அறிவு (1)** | விடயங்களையும் அடிப்படை எண்ணக் கருக்களையும் ஞாபகப்படுத்தல் | **வரைக (Draw)** | வரைபடம் அல்லது வரிப்படமொன்றைச் சமர்ப்பித்தல் |
| | | **தொடர்புபடுத்துக (Relate)** | தர்க்கரீதியாக அல்லது காரணரீதியாக தொடர்புகளைத் தாபித்தல் |
| | | **கூறுக/ குறிப்பிடுக(State)** | திட்டவட்டமாக அல்லது தெளிவாக விபரங்களை வெளிப்படுத்தல் |
| | | **அடையாளங்காண்க / இனங்காண்க (Identify)** | கருத்திற்கொண்ட பின்னர் ஏற்பிசைவு செய்தல், தாபித்தல் அல்லது தெரிவுசெய்தல் |
| | | **நிரற்படுத்துக / பட்டியலிடுக (List)** | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றன்கீழ் ஒன்றாக எழுதுதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **முற்றடக்கம் (2)** | யோசனைகள் மற்றும் தகவல்களை விபரித்தலும் தெளிவுபடுத்தலும் | **ஏற்பிசைவு செய்க (Recognize)** | அறிவு அல்லது சூழ்நிலை அனுபவத்தைப் பயன்படுத்தி செல்லுபடித்தன்மையை அல்லது அதன் இயலாமையைக் காட்டுதல் |
| | | **பொருள் விளக்குக / கருத்துக்கூறுக(Interpret)** | விளங்கக்கூடிய அல்லது பரிச்சயமான பதங்களில் தெளிவுபடுத்தல் |
| | | **விளக்குக (Describe)** | பிரதான அம்சங்களை எழுதுதலும் தொடர்பாடுதலும் |
| | | **விபரிக்குக (Explain)** | உரிய விடயங்களைப் பயன்படுத்தி தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | | **பொருள் வரையறை செய்க / வரைவிலக்கணப்படுத்துக(Define)** | சரியான தன்மை, நோக்கு அல்லது பொருளைத் தருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **பிரயோகம் (3)** | புதிய சூழ்நிலைகளில் அறிவைப் பயன்படுத்தலும் பின்பற்றலும் | **கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க(Reconcile)** | வேறொன்றுடன் ஒத்திருப்பதை / பொருந்தியிருப்பதை ஒப்புவித்தல் |
| | | **வரைக (Graph)** | வரைபுகள் மூலம் குறித்துக்காட்டுதல் |
| | | **மதிப்பிடுக (Assess)** | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | | **தீர்க்குக (Solve)** | கணிப்பீடுகள் அல்லது விளக்கங்கள் ஊடாக தீர்வைக் கண்டுபிடித்தல் |
| | | **தயாரிக்குக (Prepare)** | குறித்த நோக்கத்திற்காக உரிய முறையில் தயார்படுத்தல் |
| | | **எடுத்துக்காட்டுடன் விவரிக்குக (Demonstrate)** | உதாரணங்களுடன் நிறுவுதல் அல்லது வெளிக்காட்டல் |
| | | **கணிக்குக / கணிப்பிடுக (Calculate)** | கணிதரீதியான கணிப்பீட்டுடன் கண்டறிதல் அல்லது கணித்தல் |
| | | **பிரயோகிக்குக (Apply)** | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டுவருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **பகுப்பாய்வு (4)** | யோசனைகளுக் கிடையிலான தொடர்புகளை எழுதுதலும் பிரசினங்களைத் தீர்த்தலும் | **தொடர்பாடுக(Communicate)** | தகவல்களைப் பகிர்தல் அல்லது பரிமாறுதல் |
| | | **சுருக்கமாகக குறிப்பிடுக(Outline)** | முக்கிய அம்சங்களின் தொகுப்பினைத் தருதல் |
| | | **வேறுபடுத்துக (Contrast)** | வேறுபாடுகளைக் காட்டுவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | **ஒப்பிடுக (Compare)** | ஒற்றுமைகளை அறிவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | **கலந்தாய்வு செய்க / ஆராய்க (Discuss)** | விவாதிப்புகள் மூலம் விபரமாக ஆய்வுசெய்தல் |
| | | **வித்தியாசப்படுத்துக / வகையிடுக (Differentiate)** | சிலவற்றை வேறுபடுத்துகின்ற வித்தியாசங்களைக் காட்டுதல் |
| | | **பகுப்பாய்வு செய்க (Analyze)** | தீர்வினை அல்லது பேறினை கண்டுபிடிப்பதற்காக விபரமாக ஆய்வுசெய்தல் |